பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

14 03 2025 **FRIDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. தமிழக அரசின் வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை வரவேற்றும், குறைகூறியும் பல்வேறு கட்சித்தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

2. தமிழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளத்தை இந்த பட்ஜெட் அமைத்துள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. இந்த பட்ஜெட்டில் வெற்று அறிவிப்புகள் மட்டுமே இடம்பெற்றுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. தமிழக சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 30-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

5. குளிர்கால சிறப்பு ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா நான்கு தங்கப்பதக்கங்களை வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>>>

தமிழக சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையை வரவேற்றும், குறைகூறியும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளத்தை இந்த பட்ஜெட் அமைத்துள்ளதாக திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மகளிர் நலனுக்கான திட்டங்கள், வேலைவாய்ப்புகளை உருவாக்க வகை செய்யும் தொழில் பூங்காக்கள், இளையோர் நலனுக்கான உயர் தொழில்நுட்பத்துறை வளர்ச்சிக்கான அறிவிப்புகள், புதிய விமான நிலையம், புதிய நகரம், புதிய நீர்த்தேக்கம், அதிவேக ரயில்சேவை போன்ற அறிவிப்புகள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த பட்ஜெட்டில் வெற்று அறிவிப்புகள் மட்டுமே இடம்பெற்றுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் குறை கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கும் திட்டம் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய அவர், அஇஅதிமுக அரசு செயல்படுத்தி வந்த இந்த திட்டத்தை நான்காண்டுகள் முடக்கிவைத்துவிட்டு, ஆட்சியின் இறுதியில் செயல்படுத்தப்போவதாக அறிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நான்காண்டுகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயலாக்கம் குறித்து திமுக அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ராமேஸ்வரத்தில் புதிய விமான நிலையம் அமைக்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய அவர், கடந்த ஆண்டு ஓசூரில் விமான நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்தது இன்னும் செயல்படுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

திமுக அரசின் மோசடிகளை மக்களின் கவனத்தில் இருந்து திசை திருப்பவே ரூபாய் குறியீட்டை மாற்றி குழப்ப அரசியலில் ஈடுபட்ட முதலமைச்சர், டாஸ்மாக் முறைகேடு குறித்து வாய் திறக்க மறுப்பது ஏன் என்றும் திரு எல். முருகன் வினவியுள்ளார்.

உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டிய பின்னரும் கூட, ஊழல் புகாரில் சிறை சென்று வருபவர்களை தியாகியாக்கி, பிறகு அமைச்சராக்கி மேலும் ஊழல் புரிவதையே திமுக தலைமை விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் நலத்திட்டங்களை பற்றி திமுக அரசுக்கு கவலை இல்லை என்றும் திரு எல். முருகன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

மக்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும் பட்ஜெட்டாக இது உள்ளது என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் தமிழக அரசின் கடன் சுமை ஒன்பது லட்சம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒதுக்கீடு இல்லாத விளம்பர அறிவிப்புகள் மட்டுமே இதில் இடம்பெற்றிருப்பதாகவும் திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழக அரசின் பட்ஜெட்டில் இளையோர், முதியோர், மகளிர், ஷெடியூல்டு மற்றும் பழங்குடியினர் நலனுக்கான திட்டங்கள் இடம்பெற்றுள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

இந்த பட்ஜெட்டில் முதன்மை திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், புதிய திட்டங்கள் எதுவும் இதில் இடம்பெறவில்லை என்று கூறியுள்ளார்.

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து எதுவும் தெரிவிக்காமல், சமூக நீதிக்கு எதிராக திமுக அரசு துரோகம் இழைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நடப்பாண்டு இறுதியில் தமிழக மக்கள் ஒவ்வொருவர் பெயரிலும் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கப்பட்டிருக்கும் என்றும், இந்த நிதிநிலை அறிக்கை மக்களுக்கு பயன் அளிக்காத கடன் சுமையை அதிகரிக்கக்கூடியது என்றும் திரு ராமதாசு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் பன்முக வளர்ச்சியை இந்த பட்ஜெட் உறுதி செய்துள்ளதாக மதிமுக பொதுச்செயலாளர் திரு வைகோ தெரிவித்துள்ளார்.

வெற்று முலாம் பூசப்பட்ட அறிக்கை இந்த பட்ஜெட் என்று புதிய தமிழகம் கட்சித்தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கூறியுள்ளார்.

இந்த நிதிநிலை அறிக்கை மக்களின் உணர்வுகளை பிரதிபலித்துள்ளதாக கூறியுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலர் திரு முத்தரசன், சில எதிர்பார்ப்புகளும் தொடர்வதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த பட்ஜெட்டில் மக்களுக்கு பலன் அளிக்கும் அம்சங்கள் எதுவும் இல்லை என்று தமிழக வெற்றிக்கழகம் கூறியுள்ளது.

மின்சார கட்டணம் உயர்ந்துள்ள நிலையில், அதனை சரிசெய்வதற்கு சூரிய மின்உற்பத்தி தகடுகளை நிறுவ மானியம் அறிவிக்கப்படாதது வருத்தம் அளிப்பதாக உள்ளது என்று மதுரை மாவட்ட சிறு-குறு தொழில் சங்கம் கூறியுள்ளது.

இதற்கிடையே, தமிழக அரசின் கடன் வாங்கும் திறன் நிர்ணயிக்கப்பட்ட வரம்பிற்குள் உள்ளதாக நிதித்துறை முதன்மைச்செயலர் திரு உதயசந்திரன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

_(சவுண்ட் பைட் - உதயசந்திரன் - 25 செகண்ட்ஸ்)_

<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 30-ஆம் தேதிவரை நடைபெறும் என்று பேரவைத் தலைவர் திரு அப்பாவு அறிவித்துள்ளார்.

இன்று தமது தலைமையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

_(சவுண்ட் பைட் - அப்பாவு - 31 செகண்ட்ஸ்)_

<<<<<>>>>>>

டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை முற்றிலும் மறுப்பதாக மாநில அமைச்சர் திரு செந்தில் பாலாஜி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அமலாக்கத்துறையின் குற்றச்சாட்டுகள் மீது சட்டப்பூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்.

ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடு நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு முகாந்திரம் ஏதும் இல்லை என்றும் திரு செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இந்த ஊழலுக்கு காரணமான சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர் திரு செந்தில் பாலாஜியை, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று பிஜேபி மற்றும் பாமக வலியுறுத்தியுள்ளன.

<<<<<>>>>>>

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு தயாநிதி மாறன் தாக்கல் செய்த அவதூறு வழக்கின் விசாரணைக்கு, சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்துள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரணை செய்த நீதிபதி திரு இளந்திரையன், இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

இவ்வழக்கின் விசாரணை அடுத்த மாதம் 4-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

## *மாவட்டச் செய்திகள்*

ராணிப்பேட்டை மாவட்டம் வணக்கம்பாடி கிராமத்தில் கால்நடை மருத்துவ முகாமினை ஆட்சியர் திருமதி சந்திரகலா தொடங்கிவைத்தார்.

-----------------

நீலகிரி மாவட்டம் உதகை மற்றும் கோத்தகிரி பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினருடன் ஆட்சியர் திருமதி லஷ்மி பவ்யா தண்ணீரு இன்று கலந்துரையாடினார்.

---------------

சிவகங்கை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் காரைக்குடியில் உள்ள கண்ணதாசன் மணிமண்டபத்தில் வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த ஸ்ரீ சந்திரசூடேஸ்வரர் கோவில் தேர் திருவிழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<<>>>>>>

## *விளையாட்டுச் செய்திகள்*

குளிர்கால சிறப்பு ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா நான்கு தங்கப்பதக்கங்களை வென்றது.

இத்தாலியின் **Turin**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் பனிச்சறுக்கு பிரிவில் **Deepak Thakur** மற்றும் **Giridhar** தங்கப்பதக்கம் வென்றனர்.

அபிஷேக் குமார் மற்றும் ராதா தேவி வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில், இந்தியா இதுவரை 8 தங்கம், 10 வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

-------------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி – **Shrivalli Bhamidipaty** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-2, 6-1 என்ற செட் கணக்கில், கஜகஸ்தானின் **Sandugash Kenzhibayeva -** சைப்ரசின் **Daria Frayman** இணையை வென்றது.

----------

சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – **Nugroho** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-----------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டிக்கான தில்லி அணியின் கேப்டனாக அக்ஷர் பட்டேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

--------------

சண்டிகரில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Ishaque Eqbal** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

***<<<<<END>>>>>>***